**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.64/2025** |
| Deposition of witness | : | P.W.9(Additional Witness) |
| Name | : | திரு.சாமிநாதன் |
| Father's /Husband Name | : | கலியபெருமாள் |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 54 |
| Occupation | : | தலைமைக்காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 7th day of October 2025.
A2 present. A1 absent. petition under section 355 BNSS filed. Allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக 668 ஆக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.02.2025 ம் தேதி குடவாசல் காவல் நிலைய பொறுப்பலிருந்த போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த பிரபாகரன் மனைவி சௌமியா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து அதற்கு நிலைய மனு எண்.96/2025 எனக் கொடுத்து 28.02.2025 ம் தேதி குடவாசல் காவல் நிலைய குற்ற எண்.72/2025, ச.பி.296(பி), 115(2), 351(1) BNS மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கினை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை அசலினை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துஇதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து விட்டு ஒரு நகலை புலனாய்வு அதிகாரி பார்வைக்கு வைத்தேன். புலன் ஆய்வு அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**இந்த வழக்கில் புகாரை வாங்கியதும் வழக்கை பதிவு செய்ததும் நான் தான் என்றால் சரிதான்.** புகார் பெறப்பட்ட 6 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 6 நாட்கள் காலதாமதத்திற்கு காரணங்கள் ஏதும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை ஆனால் மனு எண் பதிவு செய்துள்ளேன். மனு ரசீதில் களம் விசாரணை செய்யப்பட்ட பிறகு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் எ்ன்றால் சரிதான். விசாரணை மேற்கொண்டதை பொது நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அதன் அடிப்படையில் தான் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 6 நாட்கள் காலதாமதமானது எதிரிகள் மீது பொய்யான வழக்கினை ஜோடிப்பதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தவறான தகவலின் பேரில் எதிரிகள் மீது இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2023.10.07 16:20:17 +05'30'

District Munsif-Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`